**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 2010–2011 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – மாற்றுத் திறனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் சென்றடைவதை உறுதி செய்தல்–அனைத்து மாவட்டத்திலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அமைத்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.06 நாள்:27–01–2011

தை13, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்க:–

1. 2010–11 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு,
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க. எண்.10707/ஊ.ம.2–1/2010, நாள் 10–11–2010.

–––––––

**ஆணை:**

2010–2011ம் ஆண்டின் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏனையவற்றுடன் கீழ்கண்ட அறிவிப்பு ஒன்றினை செய்தார்கள்.

**மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் சென்றடைவதை உறுதி செய்தல்.**

''மாற்றுத் திறனாளிகளுக்கு இந்த அரசின் சார்பில் வழங்கப்படுகின்ற உதவிகள் அனைத்தும் செம்மையாக போய் சேருகிறதா என்பதை அறிந்திடவும், அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அந்தந்த மாற்றுத் திறனாளிகள் வாழும் பகுதிகளில் உள்ள அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அவ்வப்போது தொடர்பு கொண்டு அவர்களுக்கு துணை நிற்க, அரசின் சார்பில் தேவையான வழிவகைகள் மேற்கொள்ளப்படும்''.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கருத்துருவில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள் அவர்களுக்கு சென்றடைவதை உறுதி செய்யும் வண்ணம் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு ஒன்றை ஏற்படுத்தலாம் என்றும், இக்குழுவில் மாவட்ட ஆட்சியரை தலைவராகவும் அந்தந்த மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் உள்ளடங்கிய ஒருங்கிணைப்பு குழுவில் உறுப்பினர்களாக நியமனம் செய்யலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் சென்றடைவதை

உறுதி செய்யும் வண்ணம் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவை அமைக்க ஆணையிடுகிறது.

**தலைவர் –** மாவட்ட ஆட்சித்தலைவர்

**உறுப்பினர்கள்**

1) மாவட்டத்தைச்சார்ந்த நாடளுமன்ற உறுப்பினர்கள்
2) மாவட்டத்தைச் சார்ந்த சட்ட மன்ற உ றுப்பினர்கள்
3) மாவட்ட ஊராட்சித்தலைவர்
4) ஊராட்சி ஒன்றிய தலைவர்கள்
5) இணை இயக்குநர், சுகாதாரத் துறை
6) மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்
7) மாவட்ட கல்வி அலுவலர்
(8 – 14) மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படும் மாற்றுத் திறனாளிகளின் பிரதி நிதிகள் ஏழு நபர்கள் உடல் குறைப்பாட்டின் வகை வாரியாக)
8) பார்வை குறை உடையோர்.
9) செவித்திறன் குறைபாடு உடையோர்
10) மன வளர்ச்சி குன்றியோர்
11) மனநலம் பாதிக்கப்பட்டோர்
12) பல்வகை குறைபாடு உடையோர்
13) மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டோர்
14) கை, கால் பாதிக்கப்பட்டோர்.
15) மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் – உறுப்பினர் செயலர்

4. மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சர்கள் கலந்துகொள்ள விரும்பினால் அவர்களுக்குரிய மரபுச்சீர்முறை (Protocol) பின்பற்றப்பட்டு கூட்டம் நடத்தப்பட வேண்டும். இந்த ஒருங்கிணைப்புக் குழு ஆண்டிற்கு இரு முறை (இரண்டாவது மற்றும் நான்காவது காலாண்டில்) கூட்டப்பட வேண்டும்.

5. இக்குழுவின் கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டிய முக்கியமான விவரங்கள் பின்வருமாறு:-

அ) மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை வழங்குதல்.

ஆ) மாற்றுத்திறனாளிகளுக்கு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பெறுவதில் ஏற்படும் சிரமங்களை நீக்குதல்.

இ) மாற்றுத்திறனாளிகளுக்கு, பிறதுறைகளின் மூலம் வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் பெறுவதில் ஏற்படும் சிரமங்களை நீக்குதல்.

ஈ) மேலும் அமைச்சர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் தங்கள் வாழும் பகுதிகளின் புவியியல் அமைப்பு, கூடுதலாக காணப்படும் உடல் குறைபாடுகள் போன்ற காரணங்களால் நலத்திட்ட உதவிகளைப் பெறுவதில் மாற்றுத் திறனாளிகளுக்கு

உள்ள சிரமங்களின் அடிப்படையில் கருத்துக்களைப் பெற்று, ஆலோசனைகள் செய்து, அவற்றை போக்கிட தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் .

6. மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தை நடத்தி முடித்த பின்னர் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நடைப்பெற்ற நாள், இக்குழு கூட்டத்தில் கலந்துக் கொண்டவர்களின் விவரங்கள், கூட்டத்தில் விவாதித்து எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை அரசிற்கு விரிவான அறிக்கையாக மாவட்ட ஆட்சித் தலைவர், அரசு செயலாளருக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கும் அனுப்பி வைக்க வேண்டும் என்றும், கூட்டம் நடைபெற்ற இரண்டு வாரத்திற்குள் இந்த அறிக்கையை அனுப்ப வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். மேலும் இத்திட்டத்தை செயல்படுத்த அவ்வப்போது தேவையான வழிகாட்டி அறிவுரைகளை மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்ப வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறை, சென்னை–9.
இயக்குநர், பொது சுகாதாரத் துறை, டி.எம்.எஸ். வளாகம், தேனாம்பேட்டை, சென்னை–18.
ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, கிண்டி, சென்னை–32.
இயக்குநர், ஊரக வளர்ச்சி முகமை, பனகல் மாளிகை, சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள்.
இ.கோ/உ.நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.